உஞ்சனை கிராம ஊராட்சி தலைவரின் நடவடிக்கைகள்

முன்னிலை : B.சாந்தி அவர்கள்

ந.க.எண். 06/2023 ஊ.தி. நாள் : 20.10.2023

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையம் ஊராட்சி மன்றம், உஞ்சனை கிராமம் மற்றும் ஊராட்சி - சர்வே எண்கள்.170/2A2 -ல்1.96ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப் பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை(நிலை)எண்.79. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, ந.வ4(3)துறை நாள் - 04.05.2017
2. அரசாணை(நிலை)எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்-04.02.2019, மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. நாள்-31.01.2020
3. அரசாணை(நிலை)எண்.138. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை,ந.வ4(2)துறை நாள் - 04.06.2004
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடித எண்.NKL/XT3PD2C5/12396/2023,நாள்-01.06.2023-ன்படி தானப்பத்திர ஆவண எண்.4878/2023 நாள்.12.06.2023
5. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் அவர்களின் கடித எண். NKL/XT3PD2C5/12396/2023,நாள்-01.06.2023.
6. கூராய்வுக் கட்டணம்- உஞ்சனை கிராம வங்கி கணக்கு எண்.7387731280. நாள். 20.10.2023 மற்றும் (3%Market Value) நிலப்பயன் மாற்றக் கட்டணம் - இசலான் எண்.20231020015669 நாள். 09.10.2023

-o -o -o -o -o -o -o –

பார்வை (1) (2) மற்றும் (3)-ல் காணும் அரசாணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எலச்சிபாளையம் ஊராட்சி மன்றம், உஞ்சனை கிராமம் மற்றும் ஊராட்சி, சர்வே எண்கள். 170/2A2 -ல் 1.96 ஏக்கர் பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தப்பட்டு நாமக்கல் நகர் ஊரமைப்பு

Scanned with OKEN Scanner

உதவி இயக்குநர் அவர்களின் ஒப்புதலின்படி மனைப்பிரிவிற்கு வரைபட எண்ணிட்டு SWP/DTCP/NAMAKKAL/LAYOUTNo.247/2023 நாள் 21.07.2023-ல தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் சாலை-மனைமுடக்குகள் பார்வை(4)-ல் தெரிவித்துள்ளவாறு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் உஞ்சனை ஊராட்சி மன்ற ஒப்புதலுக்காக மேற்படி மனைப்பிரிவிற்கு கூராய்வுக் கட்டணமாக ரூ.35000/- உஞ்சனை கிராம வங்கி கணக்கிலும் மற்றும் நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூ.63800/- பார்வை(6) ல் கண்டுள்ளவாறு இசலான் மூலமாக பெறப்பட்டதாலும், நாமக்கல் மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநரால் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைக்களுக்குட்பட்ட மேற்படி மனைப்பரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது. மேற்காணும் நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரம் இரத்து செய்திடவும் அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

B. Santh

தலைவர்
உஞ்சனை கிராம ஊராட்சி

தலைவர்
ஊராட்சி மன்றம்.
உஞ்சனை

P Mu

பெறுநர் : திரு. P.மயில்சாமி மற்றும் ஒருவர்
515/1 பெரியகாடு
[illegible]
திருச்செங்கோடு
நாமக்கல்

Scanned with OKEN Scanner